பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**07 11 2025 FRIDAY 12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வந்தே மாதரம் பாடல் நாட்டு மக்களின் தாரக மந்திரமாகவும், உற்சாகம் அளிப்பதாகவும் உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. பீகாரில் இரண்டாவது கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ள 122 தொகுதிகளில் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

3. இந்தியா — அமெரிக்கா இடையிலான இருதரப்பு ஒத்துழைப்புகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல இருநாடுகளும் முடிவு செய்துள்ளன.

4. மெலிசா புயலால் பாதிக்கப்பட்ட ஜமைக்கா நாட்டிற்கு இந்தியா சுமார் 20 டன் அளவிலான நிவாரண உதவிப்பொருட்களை அனுப்பியுள்ளது.

5. இந்திய ஹாக்கியின் நூற்றாண்டு கொண்டாட்டத்தை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா புதுதில்லியில் இன்று தொடங்கிவைத்தார்.

--- இனி விரிவான செய்திகள் -----

<<<<<>>>>>>>>

வந்தேமாதரம் பாடல் இயற்றப்பட்டதன் **150**-வது ஆண்டு விழா கொண்டாட்டத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று தொடங்கி வைத்தார்.

இது தொடர்பான சிறப்பு அஞ்சல் தலை மற்றும் நாணயத்தையும் அவர் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், வந்த மாதரம் பாடலின்மூலம் வளமான, ஒருங்கிணைந்த சுதந்திர இந்தியாவை உருவாக்க கவிஞர் **Bankim Chandra Chatterjee** அழைப்பு விடுத்ததை சுட்டிக்காட்டினார்.

இந்த பாடல் நாட்டு மக்களின் தாரக மந்திரமாகவும், உற்சாகம் அளிப்பதாகவும் உள்ளது என்று கூறிய பிரதமர், இதனை அனைவரும் கூட்டாக பாடுவது, ஒரு புதிய அனுபவமாகவும், மனதிற்கு ஊக்கம் அளிப்பதாகவும் உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

**(*Sound Byte — வந்தே மாதரம் - 48 Sec. )***

இதுகுறித்து குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்த பாடல் தேச

ஒற்றுமை மற்றும் நாட்டுப்பற்றின் அடையாளமாக திகழ்கிறது என்று கூறியுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்த பாடல் அனைத்து மதத்தினரையும், மொழியினரையும் ஒருங்கிணைத்து சுதந்திர போராட்டத்திற்கு ஒன்று திரள காரணமாக இருந்ததாக கூறியுள்ளார்.

'வந்தே மாதரம்' பாடல், நாட்டு மக்களின் இதயங்களில் தேசபக்தி எனும் அணையாத ஜோதியை தொடர்ந்து ஏற்றி வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்த பாடல் சுதந்திரப் போராட்டத்தை ஒருங்கிணைத்த நிலையில், தற்போது அது நாட்டின் வளர்ச்சி, புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் உலகளாவிய தலைமைத்துவத்திற்கு உந்து சக்தியாக திகழ்கிறது என்று தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் மத்திய அரசு அலுவலகங்கள், கல்வி நிலையங்கள் உட்பட பல்வேறு இடங்களில் வந்தே மாதரம் பாடல் பாடப்பட்டது.

மதுரையில் உள்ள மகளிர் மேல்நிலைப்பள்ளியில் ஆயிரத்து **500-**க்கும் மேற்பட்ட மாணவியர் ஒன்று சேர்ந்து வந்தே மாதரம் பாடலை பாடினர்.

இது தங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்தியதாக மாணவி ஒருவர் தெரிவித்தார்.

***(Voice Byte — மாணவி — 22 Sec. )***

சென்னை அகில இந்திய வானொலி நிலைய வளாகத்தில், துணை தலைமை இயக்குனர் திருமதி வாசுகி தலைமையில், ஊழியர்கள் வந்தே மாதரம் பாடலை பாடினர்.

<<<<<>>>>>>>>

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் இரண்டாவது கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள **122** தொகுதிகளில் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேநதிர மோடி இன்று அவுரங்காபாத் மற்றும் கைமூர் மாவட்டங்களில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, கயா மற்றும் ரோட்டாவிலும், ராஷ்ட்ரிய ஜனதாதள தலைவர் திரு தேஜஸ்வி யாதவ், புர்னியா உள்ளிட்ட இடங்களிலும் பிரச்சாரம் மேற்கொள்கின்றனர்.

<<<<<>>>>>>>>

கர்நாடக கரும்பு விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண உதவுமாறு அம்மாநில முதலமைச்சர் திரு. சித்தராமையா மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்

இது தொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு அவர் எழுதி உள்ள கடிதத்தில், கரும்பு விவசாயிகளின் நலன், மாநிலத்தின் கிராமப்புற பொருளாதாரம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இப்பிரச்சினையில் பிரதமர் தலையிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

கரும்புக்கு டன் ஒன்றுக்கு 3 ஆயிரத்து 500 ரூபாய் விலை நிர்ணயம் செய்தல், எத்தனால் ஒதுக்கீட்டை அதிகரித்தல், உரிய நேரத்தில் பணம் கிடைப்பதற்கான வழிமுறைகள் உள்ளிட்ட 7

கோரிக்கைகளை முதலமைச்சர் திரு. சித்தராமையா தனது கடித்தத்தில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>>>>

இந்திய வங்கிகள் தற்போது லாபத்தில் இயங்கி வருவதாக ரிசர்வ் வங்கி கவர்னர் திரு சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் பேசிய அவர், கடந்த 2018-ஆம் ஆண்டு நஷ்டத்தில் இயங்கிய பாரத ஸ்டேட் வங்கி தற்போது 100 பில்லியன் டாலர் வர்த்தகம் மேற்கொள்ளும் அளவுக்கு வளர்ச்சியடைந்திருப்பதாக குறிப்பிட்டார்.

பொதுத்துறை வங்கிகள் ஒருங்கிணைப்பு, பெருமளவிலான மறுமுதலீடு போன்ற பல்வேறு தொடர் நடவடிக்கைகள் காரணமாக, வங்கிகளின் நிதிநிலை சீரடைந்திருப்பதாக அவர் கூறினார்.

வங்கி சீர்திருத்த நடவடிக்கைகள் கடன் வாங்குவோர் இடையேயும், அவற்றை முறையாக திருப்பிச் செலுத்துவதை ஊக்குவித்து வருவதாகவும் திரு சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்தார்.

<<<<<>>>>>>>>

இந்தியா — அமெரிக்கா இடையிலான இருதரப்பு ஒத்துழைப்புகளை முன்னெடுத்துச் செல்வது குறித்து இருநாடுகளும் முடிவு செய்துள்ளன.

இதுதொடர்பாக, அமெரிக்காவுக்கான இந்திய தூதர் திரு வினய் குவாத்ரா, வாஷிங்டனில் அந்நாட்டு வெளியுறவுத்துறை உதவி செயலாளர் திரு பால் கபூரை சந்தித்து பேசியுள்ளார்.

வர்த்தகம், தொழில்நுட்பம், எரிசக்தி, பிராந்திய பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>>>

கோவாவில் வரும் **20-**ஆம் தேதிமுதல் **28-**ஆம் தேதிவரை நடைபெறவுள்ள **56-**வது இந்திய சர்வதேசத் திரைப்பட விழாவில் **(IFFI),** முதல் முறையாக 'சினிம் ஏஐ ஹேக்கத்தான்' **(CinemAI Hackathon)** போட்டி நடத்தப்பட உள்ளது.

திரைப்படத் தயாரிப்பு மற்றும் கதை சொல்லும் முறையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் பங்களிப்பை ஊக்குவிப்பதே இந்த போட்டியின் முக்கிய நோக்கமாகும்.

<<<<<>>>>>>>>

எல்லை பாதுகாப்புப்படையின் ஜம்மு காஷ்மீர் பிரிவு சார்பில், வரும் ஒன்பதாம் தேதி ஜம்முவில் உள்ள **Paloura** பகுதியில் மாரத்தான் ஓட்டம் நடைபெறவுள்ளது.

இதற்கு முன்னோட்டமாக ஜம்முவில் இன்று முதல் இரண்டு நாள் கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில், எல்லை பாதுகாப்புப்படையினரின் பேண்ட் வாத்திய இசை உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

மாரத்தான் ஓட்டத்தில் பங்கேற்போர் தங்களுக்கான அடையாள எண் மற்றும் உடைகளை இந்த கண்காட்சியில் பெற்றுக்கொள்ளலாம் என எல்லை பாதுகாப்புப்படை தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>>>

துபாயில் வசிக்கும் இந்தியர்கள் வைத்துள்ள கணக்கில் காட்டப்படாத சொத்துக்கள் தொடர்பாக, அமலாக்கத்துறையினர் தில்லி மற்றும் கோவாவில் சோதனை மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் மேற்கொண்ட ஹவாலா பணப்பரிவர்த்தனை தொடர்பாக அந்நிய செலாவணி மேலாண்மை சட்டத்தின்கீழ், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>>>

மெலிசா புயலால் பாதிக்கப்பட்ட ஜமைக்கா நாட்டிற்கு இந்தியா சுமார் **20** டன் அளவிலான நிவாரண உதவிப்பொருட்களை அனுப்பியுள்ளது.

இவற்றை ஜமைக்காவுக்கான இந்திய தூதர் திரு மயங்க் ஜோஷி, ஜமைக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் திருமதி **Kamina Johnson Simth**-யிடம் வழங்கினார்.

மருந்துகள், அவசர மருத்துவ சாதனங்கள், படுக்கை விரிப்புகள், ஜெனரேட்டர்கள், சூரியசக்தி மின் விளக்குகள், சமையல் அறை சாதனங்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் இதில் அடங்கியுள்ளன.

<<<<<>>>>>>>>

ஜி-**20** உச்சிமாநாடு உலகளாவிய நிதி சீர்திருத்தங்களை ஊக்குவிப்பதாக அமையும் என்று தென்னாப்பிரிக்கா அதிபர் திரு சிரில் ராமபோசா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அந்நாட்டு நாடாளுமன்றத்தில் இதனை தெரிவித்த அவர், ஜி-20 அமைப்பின் தலைமை பொறுப்பை தென்னாப்பிரிக்கா ஏற்றுள்ள காலக்கட்டத்தில், நிலையான, மேலும் வலிமை வாய்ந்த சர்வதேச நிதி கட்டமைப்பை உருவாக்க பாடுபடும் என்று குறிப்பிட்டார்.

<<<<<>>>>>>>>

இந்திய ஹாக்கி விளையாட்டின் நூற்றாண்டு கொண்டாட்டத்தை மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா புதுதில்லியில் இன்று தொடங்கிவைத்தார்.

புதுதில்லியில் உள்ள மேஜர் தியான்சந்த் விளையாட்டரங்கில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் ஒருபகுதியாக, ஹாக்கி போட்டியில் இந்தியாவின் சாதனைகளை எடுத்துரைக்கும் புகைப்படக் கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

---------

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் **Veer Chotrani** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், எகிப்தின் **Mohamed Sharaf**-ஐ வென்றார்.

-----------------

இந்தியா ஏ அணிக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று தென்னாப்பிரிக்கா ஏ அணி முதல் இன்னிங்சில் சற்றுமுன்வரை **5** விக்கெட் இழப்பிற்கு **81** ரன் எடுத்துள்ளது.

**<<<<<END>>>>>>**